2024 ஜூன் 27]

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பள்ளிகளைத் தரம் உயர்த்துவது பற்றி நான் நிறைய பதில் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கைகளையெல்லாம் இன்றைக்கு நாம் கையில் வைத்துக்கொண்டிருக்கிறோம். அவற்றில் எவையெல்லாம் விதிக்குட்பட்டு வருகிறதோ, அதையெல்லாம் கண்டிப்பாக எங்களுடைய அலுவலர்களோடு உட்கார்ந்து பேசி, அதற்கான கருத்துருவைப் பெற்று, எதையெல்லாம் செய்ய முடியுமோ அதைச் செய்கின்ற பணிகளில் எங்களை நாங்கள் முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வோம். அதேபோன்று, அவர் கேட்கின்ற கோரிக்கைகள் ஒவ்வொன்றையும் படிப்படியாக இந்த ஆண்டு நிறைவேற்றுவதற்கு எல்லாவிதத்திலும் நாங்கள் வழிவகை செய்வோம். அவர் கேட்டிருக்கின்ற ஆசிரியர் பணியிடங்களைப் பொறுத்தவரைக்கும், இன்றைக்கு ஆங்காங்கே தற்காலிக ஆசிரியர்களை நியமித்திருக்கிறோம் என்று சொன்னாலும், ஏற்கெனவே* BT teachers-*ஆசிரியர்கள் 2,222 பேர் தேர்வை முடித்துவிட்டு,* certificate verification *கட்டத்தில் இருக்கிறார்கள். இந்த மாத இறுதிக்குள் அதுவும் நிறைவு செய்யப்பட்டு, எங்கெங்கெல்லாம் காலிப் பணியிடங்கள் இருக்கின்றனவோ, அவை நிரப்பப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *அம்பேத்குமார், மாண்புமிகு பால் மற்றும் பால் வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

109—

பால் குளிரூட்டும் நிலையம்

***58817—திரு. S. அம்பேத்குமார்:**

மாண்புமிகு பால் மற்றும் பால் வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், பால் மற்றும் பால் வள மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வந்தவாசி தொகுதியில், தற்போது கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவு, குளிரூட்டும் நிலையங்களின் தற்போதைய கொள்ளளவைவிட குறைவாக இருப்பதால் இப்பகுதியில் புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அவசியம் ஏற்படவில்லை. மேலும், விற்பனையைப் பொறுத்து வந்தவாசி தொகுதியில் உப பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதி, விவசாயம் நிறைந்த ஒரு தொகுதி. விவசாயத்திற்கு அடுத்தபடியாக, பெண்கள் அதிகளவில் பால் உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறார்கள். பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற அரசு, இந்த அரசு. பொருளாதாரத்தில் அதிக கவனம் செலுத்தி, மகளிர் சுய உதவிக் குழு, மகளிர் உரிமைத் தொகை போன்றவற்றை வழங்குகின்ற நமது திராவிட மாடல் அரசு, பெண்களுக்கு, மகளிர் சுய உதவிக் குழு மூலமாக கறவை மாடுகளுக்கு வழங்கும் கடனை அதிகளவில் வழங்கி, பால் உற்பத்தியைப் பெருக்கி, அதனைப் பாதுகாக்க குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் மற்றும் பால் வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையில் இருக்கக்கூடிய ஆட்சியின் சிறப்புமிக்க செயலாக்கத்தின் காரணத்தினால், இன்றைக்கு பால் வளத் துறையில் பால் கொள்முதல் 35,15,274 லிட்டர் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இது ஒரு மிகப் பெரிய முன்னேற்றமாகப்*

2024 ஜூன் 27]

பார்க்கப்படுகிறது. ஒட்டுமொத்த திருவண்ணாமலை மாவட்டத்தில், நாளொன்றுக்கு 2,79,034 லிட்டர் பால் தற்போது கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், அங்கு விற்பனையைப் பொறுத்தவரையில், மிகக் குறைந்த அளவுக்கு, சுமார் 15,000 லிட்டர்தான் அங்கே sales capacity *இருக்கிறது. ஆனாலும், பாலின் அளவு பெருகிவருகின்ற காரணத்தால், அங்கு 50,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு* mini *பால் பண்ணை அமைக்கக்கூடிய பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது இன்னும் ஓரிரு மாதங்களில் செயல்படத் தொடங்கும்.*

முற்பகல் 10–05

வந்தவாசி சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், நான்கு பால் குளிரூட்டும் மையங்கள் (BMC) *செயல்பட்டு வருகின்றன. அதனுடைய* capacity *28 ஆயிரம் லிட்டர். அந்தத் தொகுதியிலிருந்து 23,400 லிட்டர்தான் நமக்கு வந்து கொண்டிருக்கிறது. அது அந்தக் கொள்ளளவுக்கு உட்பட்டதுதான். ஆனாலும், இன்றைக்கு அதிகமாகக் கொள்முதல் வரக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. அவர் கூறியதுபோன்று வந்தவாசி தொகுதி, நிறைய விவசாயப் பெருங்குடி மக்கள் வாழக்கூடிய பகுதி. அங்கு, பல்வேறு திட்டங்களின் மூலமாக பால் உற்பத்தியை மேலும் பெருக்குவதற்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி போன்றவற்றையெல்லாம் வழங்குவதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறோம். அது அதிகரிக்கக்கூடிய காலகட்டத்தில், பால் விற்பனையும், பால் உபபொருட்களின் விற்பனையும் அதிகரிக்குமேயானால், அங்கு முதலாவதாக பால் பண்ணையைத் தொடங்கிவிட்டு, அதைத் தொடர்ந்து, நாம் உற்பத்தி செய்யக்கூடிய ஐஸ் க்ரீம், குல்ஃபி உள்ளிட்ட பல்வேறு பால் உபபொருட்களின் விற்பனையைத் தொடங்குவதற்கான பணிகளை நாம் மேற்கொள்ள முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி சட்டமன்றத் தொகுதி என்பது, சென்னைக்கு அருகில் உள்ள ஒரு சட்டமன்றத் தொகுதியாகும். வந்தவாசி*

சட்டமன்றத் தொகுதியில் விவசாயிகளும், தொழிலாளர்களும் அதிகம் இருப்பதால், பால்மூலம் உற்பத்தியாகும் பொருட்களை வந்தவாசியிலிருந்து சென்னைக்கோ அல்லது அருகிலுள்ள மையங்களுக்கோ கொண்டு செல்வதற்கு மிக எளிதாக இருக்கின்றது. மேலும், தனியார் நிறுவனங்கள்மூலம் உற்பத்தியாகும் நெய், பால் பவுடர் உள்ளிட்ட பால் உபபொருட்களைவிட அரசுமூலம் உற்பத்தியாகும் பொருட்களின்மேல் மக்கள் மத்தியில் அதிக நம்பிக்கை உள்ள காரணத்தினாலும், வந்தவாசியில் போதுமான இடம் இருக்கின்ற காரணத்தினாலும், பால் உபபொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை வந்தவாசியில் அமைப்பதற்கு அரசு கவனம் செலுத்த வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, ஒரு சிறப்புத் திட்டமாக எடுத்து, வந்தவாசியில் தொழிற்சாலையை அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் மற்றும் பால் வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று, பால்வளத்தை அங்கு மேலும் பெருக்குவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. அங்கு 83 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. Uncovered areas-ல் அந்த எண்ணிக்கையை இன்னும் பெருக்குவதற்கான வாய்ப்பும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்படிப்பட்ட பகுதிகளில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குவதற்கான உதவிகளைக் கேட்டால், அவற்றை உடனடியாகச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம்.

Chennai Metropolitan City-ல் பால் உற்பத்தி இல்லாத காரணத்தினால், இதுபோன்ற மாவட்டங்களை நம்பித்தான் பால் விநியோகம் நடைபெறுகிறது. பால் உபபொருட்களைப் பொறுத்தவரை, தற்போது 24 ஏஜெண்டுகள் மூலமாக அங்கு பால் உபபொருட்கள் விற்பனை நடைபெற்று வருகிறது. அதற்கு, சென்னையிலும், பிற மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய பால் உபபொருட்கள் விற்பனை மையங்களுக்கு பொருட்களை அனுப்பி, விற்பனை செய்து கொண்டிருக்கின்றோம். எனவே, வருகின்ற காலகட்டங்களில், பால் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய

வாய்ப்பிருக்கின்றது. நான் ஏற்கெனவே சட்டமன்றக் கூட்டத் தொடரில் பேசும்போது இதைக் குறிப்பிட்டேன். வேலையில்லாத இளைஞர்கள், விளிம்பு நிலையில் வாழக்கூடிய மக்கள் யாராக இருந்தாலும், பால் மற்றும் பால் உபபொருட்களை விற்பனை செய்யும் முகவர்களாக விரும்பினால், அதற்கான அனுமதியை நாங்கள் தாராளமாக வழங்கி வருகின்றோம். அதுபோன்று அந்தப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் முன்வந்தால் அதை நாம் வழங்குவோம். எனவே, குறிப்பிட்ட இலக்கை அடைகின்ற நேரத்தில், கண்டிப்பாக அந்தப் பகுதியில் பால் உபபொருட்கள் தயாரிக்கின்ற மையங்கள்/நிறுவனங்களை ஏற்படுத்துதல், புதிதாக Bulk Milk Coolers அமைத்தல், புதிதாக கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்குதல் போன்று எது வேண்டுமானாலும் தொடங்குவதற்கு ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்வாகம் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

110—

முதலைப் பண்ணை

***38078—திரு. க.சொ.க. கண்ணன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, அணைக்கரை பகுதியில் முதலைப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சரகம், அணைக்கரையில் முதலைகள் பாதுகாப்பு மையம் (Crocodile Conservation Centre) 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று இந்த ஆண்டிற்கான வனத் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை